**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை**

# பொதுக் கணக்குக் குழு

# (2018–2019)

**(பதினைந்தாவது பேரவை)**

## அறுபத்து இரண்டாவது அறிக்கை

**பேரவைக்கு அளிக்கப் பெற்ற நாள்:** 07.01.2019

**சட்டமன்றப் பேரவைச் செயலகம்,**
**சென்னை–600 009.**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

# பொதுக் கணக்குக் குழு

## (2018–2019)

(பதினைந்தாவது பேரவை)

# அறுபத்து இரண்டாவது அறிக்கை

**இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 2010–2011ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (சிவில்) உள்ள நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை தொடர்பான பத்திகள் குறித்து பொதுக் கணக்குக் குழு (2015–2016) அளித்த முன்னூற்று இருபத்து ஒன்றாவது அறிக்கையில் (பதினான்காவது பேரவை) உள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய அறிக்கை.**

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

# COMMITTEE ON PUBLIC ACCOUNTS

# (2018-2019)

**(FIFTEENTH ASSEMBLY)**

## SIXTY SECOND REPORT

**REPORT ON THE ACTION TAKEN BY THE GOVERNMENT ON THE RECOMMENDATIONS CONTAINED IN THE THREE HUNDRED AND TWENTY FIRST REPORT (FOURTEENTH ASSEMBLY) OF THE COMMITTEE ON PUBLIC ACCOUNTS (2015-2016) ON THE PARAS RELATING TO HIGHWAYS AND MINOR PORTS DEPARTMENT IN THE REPORT (CIVIL) OF THE COMPTROLLER AND AUDITOR GENERAL OF INDIA FOR THE YEAR 2010-2011.**

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| 2018-2019-ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் அமைப்பு. | v |
| I. முன்னுரை | ix |
| II. அறிக்கை | xiii |
| III. இணைப்புகள் | |
| இணைப்பு I. நடவடிக்கை மேலும் தொடர விரும்பாத குழுவின் குறிப்புரைகள்/பரிந்துரைகள் பற்றிய விவரம் .... | .... **1–4** |
| இணைப்பு II. நடவடிக்கை மேலும் தொடர விரும்பும் குழுவின் குறிப்புரைகள்/பரிந்துரைகள் பற்றிய விவரம் .... | .... **5–11** |

# CONTENTS


| | | | Pages |
|---|---|---|---|
| | Composition of the Committee on Public Accounts for the year 2018-2019 | ... | vii |
| I. | Introduction | ... | xi |
| II. | Report | ... | xv |
| III. | Appendices | | |
| | Appendix - I. Statement showing the Observations/ Recommendations which the Committee has desired not to pursue. .... | .... | 1-4 |
| | Appendix- II Statement showing the Observations/ Recommendations which the Committee has desired to pursue. .... | .... | 5-11 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## 2018–2019 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் அமைப்பு
## (05.07.2018 ஆம் நாளன்று அமைக்கப் பெற்றது)

**தலைவர்**

1. திரு. துரைமுருகன்

**உறுப்பினர்கள்**

2. மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்
துணை முதலமைச்சர்
(நிதித்துறைக்கு பொறுப்பு வகிப்பவர்) (அலுவல் காரணமாக)
3. திரு. தோப்பு என்.டி. வெங்கடாச்சலம்
தலைவர், மதிப்பீட்டுக் குழு (அலுவல் காரணமாக)
4. திரு. S. செம்மலை
தலைவர், பொது நிறுவனங்கள் குழு (அலுவல் காரணமாக)
5. திரு. R.T. இராமச்சந்திரன்
6. திரு. இரா. இராஜேந்திரன்
7. திரு. தா. உதயசூரியன்
8. திரு. ஆர். கணேஷ்
9. திருமதி. ம. கீதா
10. திரு. இரா. சந்திரசேகர்
11. திரு. ஆர். நடராஜ்
12. டாக்டர். V.P.B பரமசிவம்
13. முனைவர் பழனிவேல் தியாக ராஜன்
14. திரு. கே.பி.பி. பாஸ்கர்
15. திரு. பி.வி. பாரதி
16. திரு. அ. மருதமுத்து
17. திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்
18. திரு. தூசி கே. மோகன்
19. திரு. டி.ஆர்.பி. ராஜா

**செயலகம்**

| | | |
|---|---|---|
| திரு. கி. சீனிவாசன் | .. | செயலாளர் |
| திருமதி. லி. சு. வசந்தி மலர் | .. | சிறப்புச் செயலாளர் |
| திரு. அ. அய்யன் பெருமாள் | .. | இணைச் செயலாளர் |
| திருமதி. பி. தேன்மொழி | .. | துணைச் செயலாளர் |
| திருமதி பா. ரேவதி | .. | துணைச் செயலாளர் |

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
# COMMITTEE ON PUBLIC ACCOUNTS (2018-2019)
# (Constituted on 05.07.2018)

## CHAIRMAN

1. Thiru. Durai Murugan

## MEMBERS

2. Hon'ble Thiru. O. Panneerselvam
   Deputy Chief Minister,
   (Minister for Finance) (Ex-Officio)

3. Thiru. Thoppu N.D. Venkatachalam,
   Chairman,
   Committee on Estimates, (Ex-Officio)
4. Thiru. S. Semmalai,
   Committee on Public Undertakings (Ex-Officio)

5. Thiru. R.T Ramachandran
6. Thiru. R. Rajendran
7. Thiru. T. Udhaya Suriyan
8. Thiru. R. Ganesh
9. Tmt. M. Geetha
10. Thiru. R. Chandrasekar
11. Thiru. R. Nataraj
12. Dr. V.P.B. Paramasivam
13. Dr. Palanivel Thiaga Rajan
14. Thiru. K.P.P. Baskar
15. Thiru. P.V. Bharathi
16. Thiru. A. Maruthamuthu
17. Thiru. K.A.M. Muhammed Abubacker
18. Thiru. Dusi K. Mohan
19. Thiru. T.R.B Rajaa

## SECRETARIAT

Thiru. K. Srinivasan .. Secretary

Tmt. L. S. Vasanthi Malar .. Special Secretary

Thiru. A. Ayyanperumal .. Joint Secretary

Tmt. P. Thenmozhi .. Deputy Secretary

Tmt. B. Revathi .. Deputy Secretary

# 1. முன்னுரை

இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 2010–2011–ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (சிவில்) உள்ள நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை தொடர்பான பத்திகள் குறித்து பொதுக் கணக்குக் குழு (2015–2016) அளித்த முன்னூற்று இருபத்து ஒன்றாவது அறிக்கையில் (பதினான்காவது பேரவை) உள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய அறுபத்து இரண்டாவது அறிக்கையை குழு (2018–2019) அதிகாரமளித்துள்ளவாறு பொதுக் கணக்குக் குழுவின் தலைவராகிய நான், குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

2. இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 2010–2011–ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (சிவில்) உள்ள நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை தொடர்பான பத்திகள் குறித்து பொதுக் கணக்குக் குழு (2015–2016) தனது முன்னூற்று இருபத்து ஒன்றாவது அறிக்கையை (பதினான்காவது பேரவை) 17–02–2016 அன்று பேரவைக்கு அளித்தது.

3. முன்னூற்று இருபத்து ஒன்றாவது அறிக்கையில் (பதினான்காவது பேரவை) உள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய விவரப்பட்டியினை 2018–2019ஆம் ஆண்டிற்கான குழு 27.11.2018 அன்று நடைபெற்ற தனது கூட்டத்தில் ஆய்வு செய்து இவ்வறிக்கைக்கு ஒப்புதல் அளித்தது.

4. குழுவின் பணிகளுக்குப் பெரிதும் உதவிய சட்டமன்றப் பேரவைச் செயலாளர் மற்றும் மாநில கணக்காய்வுத் தலைவர் (பொருளாதாரம் மற்றும் வருவாய் பிரிவு தணிக்கை) ஆகியோருக்குக் குழு தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

சென்னை–600 009,
நவம்பர் 27, 2018,
விளம்பி, கார்த்திகை–11,
திருவள்ளுவர் ஆண்டு–2049.

துரைமுருகன்,
தலைவர்,
பொதுக் கணக்குக் குழு.

# I. INTRODUCTION

I, the Chairman, Committee on Public Accounts having been authorised by the Committee (2018-2019) to submit the Report on its behalf, present this Sixty Second Report on the action taken by the Government on the recommendations contained in the Three Hundred and Twenty First Report (Fourteenth Assembly) of the Committee on Public Accounts (2015-2016) on the paras relating to Highways and Minor Ports Department in the Report (Civil) of the Comptroller and Auditor General of India for the year 2010-2011.

2. The Committee for the year 2015-2016 presented its Thrree Hundred and Twenty First Report (Fourteenth Assembly) on the paras relating to Highways and Minor Ports Department contained in the Report (Civil) of the Comptroller and Auditor General of India for year 2010-2011 to the Assembly on 17.02.2016.

3. The statement of action taken by the Government on the recommendations contained in the Three Hundred and Twenty First Report (Fourteenth Assembly) was considered and approved by the committee (2018-2019) at its meeting held on 27.11.2018.

4. The Committee places on record its appreciation of the valuable assistance rendered by the Secretary, Legislative Assembly and the Accountant General (Economic and Revenue Sector Audit) in its deliberations.

Chennai - 600 009,
November 27, 2018,
Vilambi, Karthigai-11,
Thiruvalluvar Aandu - 2049.

Durai Murugan,
Chairman,
Public Accounts Committee.

# II. அறிக்கை

**இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 2010–2011ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (சிவில்) உள்ள நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை தொடர்பான பத்திகள் குறித்து பொதுக் கணக்குக் குழு (2015–2016) அளித்த முன்னூற்று இருபத்து ஒன்றாவது அறிக்கையில் (பதினான்காவது பேரவை) உள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய அறிக்கை.**

---

பொதுக் கணக்குக் குழுவின் (2015–2016) முன்னூற்று இருபத்து ஒன்றாவது அறிக்கையில் (பதினான்காவது பேரவை) உள்ள ஐந்து (5) பரிந்துரைகளில் இரண்டு (2) பரிந்துரைகளின் மீது அரசு அளித்த பதில்களின் அடிப்படையில் தீர்க்கப்பெற்றதாகக் கருதப்படுகின்றன. இவை குறித்த விவரங்கள் இணைப்பு–Iல் அளிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய மூன்று (3) பரிந்துரைகளின் மீது குழு மேற்கொண்டும் நடவடிக்கையினை தொடர்வதென முடிவு செய்துள்ளது. இவை பற்றிய விவரங்கள் இணைப்பு–IIல் அளிக்கப்பட்டுள்ளன.

2. இணைப்பு–IIல் கண்டுள்ள பரிந்துரைகளுக்கான பதில்கள் ஆறு மாத காலத்திற்குள் அளிக்கப்பட வேண்டுமென்று குழு விரும்புகிறது.

சென்னை–600 009,
நவம்பர் 27, 2018,
விளம்பி, கார்த்திகை–11,
திருவள்ளுவர் ஆண்டு–2049.

துரைமுருகன்,
தலைவர்,
பொதுக் கணக்குக் குழு.

# II. R E P O R T

**REPORT ON THE ACTION TAKEN BY THE GOVERNMENT ON THE RECOMMENDATIONS CONTAINED IN THE THREE HUNDRED AND TWENTY FIRST REPORT (FOURTEENTH ASSEMBLY) OF THE COMMITTEE ON PUBLIC ACCOUNTS (2015-2016) ON THE PARAS RELATING TO HIGHWAYS AND MINOR PORTS DEPARTMENT IN THE REPORT (CIVIL) OF THE COMPTROLLER AND AUDITOR GENERAL OF INDIA FOR THE YEAR 2010-2011.**

**-----------------------------------------------------------------------------------------------------------**

Out of Five (5) recommendations contained in the Three Hundred and Twenty First Report (Fourteenth Assembly) of the Committee on Public Accounts (2015-2016), Two (2) recommendations have been treated as settled by the Committee in the light of the replies furnished by the Government vide Appendix-I for details. The Committee have decided to pursue further the remaining Three (3) recommendations vide Appendix-II for details.

2. The Committee desires that replies to the recommendations contained in the Appendix-II should be furnished within six months.

Chennai - 600 009,
November 27, 2018,
Vilambi, Karthigai-11,
Thiruvalluvar Aandu - 2049.

Durai Murugan,
Chairman,
Public Accounts Committee.

# III. APPENDICES

## APPENDIX-I

### STATEMENT SHOWING THE OBSERVATIONS/ RECOMMENDATIONS WHICH THE COMMITTEE HAS DESIRED NOT TO PURSUE

### HIGHWAYS AND MINOR PORTS DEPARTMENT

| ***Serial No.*** (1) | ***Recommendation No.*** (2) | ***Paragraph No.*** (3) | ***Subject*** (4) | ***Committee's Observations/Recommendations (5)*** |
|---|---|---|---|---|
| 1 | 3 | 3.8 | Extra expenditure due to delay in finalisation of tenders | As per G.O.No.185, Dated 6.10.2002, steering committee's decision was final regarding Civil Works/Consultancy Services/Procurement of goods. Hence, the reasons for delay explained by the department cannot be accepted. A detailed reply may be submitted to the Committee. |

| ***Reply from the Department (6)*** | ***Comments of the committee (7)*** |
|---|---|
| It is informed that a detailed reply is enclosed herewith. Further, the Committee is informed that the action will be taken by the Department to avoid any lapses in future.<br><br>(Replies received from the Highways and Minor Ports Departments Vide U.O.Note No.3162/HF-1/2016-7, Dated: 7.2.2017. | In view of the reply of the Department, and assurance to take steps to avoid such delays in future, the recommendations may not be pursued further. . |

### *குழுவின் குறிப்புரைகள்/பரிந்துரைகள்*
### *(5)*

அரசாணை எண்.185, 6,.10.2002ஆம் நாளின்படி குடிமைப்பணி/ஆலோசனை சேவைகள்/பொருட்களின் கொள்முதல் ஆகியவற்றைப் பொறுத்தவரை செலுத்துகைக் குழுவின் முடிவே இறுதியானதாக இருந்தது. ஆகவே, துறையின் கால தாமதத்திற்கான காரணத்தை ஏற்க இயலாது. குழுவிற்கு விரிவான பதில் அளிக்கப்பட வேண்டும் என குழு விரும்புகிறது.

### *துறையின் பதில்*
### *(6)*

இதுகுறித்து விரிவான பதிலறிக்கை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. மேலும், இனி வரும் காலங்களில் இத்தகைய காலதாமதங்கள் ஏற்படா வண்ணம் துறையில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குழுவிற்கு தெரிவிக்கப்படுகிறது.

(7.2.2017–ஆம் நாளிட்ட நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின் அ.சா.கு.எண்.3162/HF-1/2016-7–இள் மூலம்` பதில்கள் பெறப்பட்டன)

### *குழுவின் கருத்துரைகள்*
### *(7)*

துறையின் பதிலையும் இனி வருங்காலங்களில் அத்தகைய தாமதங்களைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அளித்த உறுதிமொழியையும் கருத்திற்கொண்டு இப்பரிந்துரைகளை மேலும் கருதிப்பார்க்கத் தேவையில்லை.

| Serial No. | Recommendation No. | Paragraph No. | Subject | Committee's Observations/Recommendations |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 2 | 4 | 3.9 | Extra expenditure due to delay in finalisation of tenders | The Committee views that the delay in finalisation of tender has become a routine feature which need to be reviewed by the Department. It should be ensured in future that such delay do not result in additional burden to the exchequre. The time limit presecribed should be followed scrupulously without omission. The Committee desires that the Department should strictly guard against the recurrences of such lapses in future. |

| Reply from the Department (6) | Comments of the committee (7) |
|---|---|
| It is informed that the department shall take necessary steps to avoid this kind of delay for causing the additional burden to the Government Treasury and to follow the period of time fixed by the Government. In this connection the Committee is also informed that the suitable instructions has been given to the concerned Department Officials in this subject vide Project Director, TNRSP-II, Chennai-28. Memo No.Accts.I/PAC/10/2016, dated 09.05.2016. | In view of the reply of the Department, and assurance to take steps to avoid such delays in future, the recommendations may not be pursued further. . |

## குழுவின் குறிப்புரைகள்/பரிந்துரைகள்
## (5)

ஒப்பந்தத்தை இறுதி செய்வதில் ஏற்படும் காலதாமதமானது வாடிக்கையாகி விட்ட ஒன்றாகக் குழு கண்டறிந்துள்ளது. இது துறையினால் மறு ஆய்வு செய்யப்பட வேண்டும். வருங்காலங்களில் இக்காலதாமதம், அரசு கருவூலத்திற்கு கூடுதல் சுமையை ஏற்படுத்திவிடக் கூடாது என்பது உறுதி செய்யப்படவேண்டும். வழங்கப்பட்ட கால வரையறையானது விடுபடாமல் கவனமுடன் பின்பற்றப்பட வேண்டும். இக்குறைபாடுகள் வருங்காலங்களில் திரும்ப நிகழாவண்ணம் துறை பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென/எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென குழு விரும்புகிறது.

## துறையின் பதில்
## (6)

குழு தெரிவித்துள்ளபடி ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்வதில் ஏற்படுகின்ற காலதாமதத்தை துறையினால் ஆய்வு செய்யப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும், வருங்காலத்தில் அரசு கருவூலத்திற்கு கூடுதல் சுமை ஏற்படுத்தும் இதுபோன்ற காலதாமதம் இனி ஏற்படாமல் இருக்க துறை விழிப்புடன் செயல்படும் எனவும் அரசினால் வரையறுக்கப்பட்ட காலஅளவு எவ்வித விடுபாடுமின்றி தவறாது கடைபிடிக்கப்படும் என்றும், குழுவிற்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இப்பொருள் தொடர்பாக சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கும் தக்க அறிவுரைகள் திட்ட இயக்குநர், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்–II, சென்னை–28, குறிப்பாணை எண்.கணக்கு 1/பொககு/10/2016, நாள் 09.05.2016 மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குழுவின் கருத்துரைகள்
## (7)

துறையின் பதிலையும் இனி வருங்காலங்களில் அத்தகைய தாமதங்களைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அளித்த உறுதிமொழியையும் கருத்திற்கொண்டு இப்பரிந்துரைகளை மேலும் கருதிப்பார்க்கத் தேவையில்லை.

## APPENDIX-II

**STATEMENT SHOWING THE OBSERVATIONS/ RECOMMENDATIONS WHICH THE COMMITTEE HAS DESIRED TO PURSUE**

**HIGHWAYS AND MINOR PORTS DEPARTMENT**

| ***Serial No.*** (1) | ***Recommendation No.*** (2) | ***Paragraph No.*** (3) | ***Subject*** (4) | ***Committee's Observations/Recommendations (5)*** |
|---|---|---|---|---|
| 1 | 1 | 1.6 | Avoidable expenditure due to non finalization of tender within the validity Tender. | Committee views that the delay in finalisation of tenders has become a routine feature which need to be reviewed by the Department. It should be ensured in future that such delay does not result in additional burden to the exchequer and the time limit prescribed by the Government should be followed scrupulously without omission. |

| ***Reply from the Department (6)*** | ***Comments of the Committee (7)*** |
|---|---|
| It is informed that according to the Committee's information delay arisen in the finalizing tenders will be investigated by department. Also, in future, it is informed that the Department will scrupulously work to avoid the dealy and additional burden to the Exchequer and limited time period said by Government will be followed without omission. | Committee desires to know whether any instructions has been issued to Departmental officials for scrupulously following the time limits in finalisation of tenders to avoid additional burden to the Exchequer. |

(Replies received from the Highways and Minor Ports Department Vide U.O.Note No.3162/HF-1/2016-7, Dated: 7.2.2017)

***குழுவின் குறிப்புரைகள்/பரிந்துரைகள்***
***(5)***

ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்வதில் ஏற்படுகின்ற காலதாமதம் வழக்கமான ஒன்றாக ஆகிவிட்டது எனவும் அது துறையினால் ஆய்வு செய்யப்பட வேண்டும் எனவும் குழு தெரிவித்துள்ளது. வருங்காலத்தில் அரசு கருவூலத்திற்கு கூடுதல் சுமை ஏற்படுத்தும் இதுபோன்ற காலதாமமும் இனி ஏற்படா வண்ணம் உறுதி செய்யப்பட வேண்டும். அரசினால் வரையறுக்கப்பட்ட கால அளவு எவ்வித விடுபாடுமின்றி தவறாது கடைபிடிக்கப்பட வேண்டும்

***துறையின் பதில்***
***(6)***

குழு தெரிவித்துள்ளபடி ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்வதில் ஏற்படுகின்ற காலதாமதத்தை துறையினால் ஆய்வு செய்யப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேலும், வருங்காலத்தில் அரசு கருவூலத்திற்கு கூடுதல் சுமை ஏற்படுத்தும் இதுபோன்ற காலதாமதம் இனி ஏற்படாமல் இருக்க துறை விழிப்புடன் செயல்படும் எனவும் அரசினால் வரையறுக்கப்பட்ட காலஅளவு எவ்வித விடுபாடுமின்றி தவறாது கடைபிடிக்கப்படும் என்றும் குழுவிற்கு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

(7.2.2017–ஆம் நாளிட்ட நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின் அ.சா.கு.எண்.3162/HF-1/2016-7–இள் மூலம்` பதில்கள் பெறப்பட்டன)

***குழுவின் கருத்துரைகள்***
***(7)***

அரசின் கருவூலத்திற்கு கூடுதல் சுமையைத் தவிர்ப்பதற்கு ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்வதில் சரியான கால வரையறைகளைப் பின்பற்றுவதற்கு துறை அலுவலர்களுக்கு ஏதேனும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளனவா என்பதை அறியக் குழு விரும்புகிறது.

| *Serial No.* | *Recommendation No.* | *Paragraph No.* | *Subject* | *Committee's Observations/Recommendations (5)* |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | The Committee notes that the stretches were declared as NH during February 2009 and CE (General) had addressed the State Government for linking the roads specified in the observation in the upgraded NH 234 on 29.4.2009. Hence it is very clear that CE (General) was aware that the road was declared as NH and hence inclusion of the same road under CRIDP was not warranted. When no reply was received from the Government in this regard, the CE should not have proposed for strengthening the above stretches without a categorical reply from N H. Though urgent repairs to the road and required, a mention should have been made in the proposal to Government for repairing the above stretches stating that the point regarding the inclusion of the same in the NH 234 is pending clarification from Government. It may be stated whether such mention was made in the proposal? if not, it is clear that the above stretches were intentionally repaired at the cost of State Government. In such a case, the responsibility should be fixed for such action. The above issues should have been analyzed before giving administrative approval. The implementing departments should put forth all the related issued to the Government while applying for administrative approval. The Committee desires to have a detailed reply in this regard. |
| 2 | 2 | 2.3 | Avoidable expenditure on strengthening of National Highway stretches under the State Road Project. | |

***Reply from the Department***
***(6)***

The carriage way in km 7/0 - 9/2, 14/0, 15/8 & 24/0 – 25/8 of Villupuram Tiruvannamalai Road were in very bad condition, necessary proposals for strengthening the above stretches were submitted to the Government by the Chief Engineer. The Government accorded its approval for the above way.

***Reply from the Department-Cont.,***
***(6)***

Considering the condition of the carriageway importance intensity of the traffic and intensity of the public to avoid the accident due to bad condition of roads the works were completed.

Necessary instructions were issued to the concerned wing of the department for not to handle / execute any work, after being notified as National Highway.

The recommendations of the committee are noted and it is assured that effective steps will be taken to avoid occurrence of such issues in future.

***Comments of the Committee***
***(7)***

Committee is constrained to note that the Department had failed to furnish the details of documentation indicating the necessity for repairing the stretches after notifying as National Highways Department also failed to furnish detail of bringing the same to the notice of the government in the proposal submitted

Details of instructions, if any, issued to the concerned wing may also be forwarded to the Committee.

## *குழுவின் குறிப்புரைகள்/பரிந்துரைகள்*
## *(5)*

பிப்ரவரி **2009** மத்திய காலத்தில் இடைப்பட்ட பகுதிகள் தேசிய நெடுஞ்சாலையாக அறிவிக்கப்பட்டன என்றும், **29.4.2009** அன்று மேம்படுத்தப்பட்ட தேசிய நெடுஞ்சாலை **234–**இல் கருத்துரையில் தலைமைப் பொறியாளரின் (பொது) குறிப்பிடப்பட்டுள்ள சாலைகளை இணைப்பதற்கு மாநில அரசிடம் கேட்டுக்கொண்டார் என்றும் குழு அறிகிறது. எனவே, நெடுஞ்சாலையாக சாலை அறிவிக்கப்பட்டது தலைமைப் பொறியாளருக்கு (பொது) தெரியும் என்பது தெளிவாகிறது. எனவே, CRIDP–இன் கீழ் அதே சாலையை இணைப்பது தேவையற்றது. இது தொடர்பாக அரசிடமிருந்து எந்த பதிலும் பெறப்படாத நிலையில் தேசிய நெடுஞ்சாலையிடமிருந்து வெளிப்படையான பதில் பெறப்படாமல் மேற்சொன்ன இடைப்பட்ட பகுதிகளை வலுப்படுத்துவதற்கு தலைமைப் பொறியாளர் கருதியிருக்கக்கூடாது. இருந்தபோதிலும் சாலைகளில் பழுதுபார்ப்பு பணிகள் தேவைப்படுவதால் அதனை NH-234–இல் சேர்ப்பது தொடர்பான விவகாரம் அரசிடமிருந்து விளக்கம் கோரி நிலுவையில் உள்ளது என்பது மேற்சொன்ன இடைப்பட்ட பகுதிகளை பழுதுபார்ப்பதற்கான அரசின் செயற்குறிப்பில் குறிப்பிட்டிருக்க வேண்டும். செயற்குறிப்பில் அவ்வாறு குறிப்பிடப்பட்டதா என்பது தெரிவிக்கப்படலாம். இல்லை எனில், மேற்சொன்ன இடைப்பட்ட பகுதிகள் வேண்டுமென்றே மாநில அரசின் செலவில் பழுது பார்க்கப்பட்டன என்பது தெளிவாகிறது. இத்தகைய நேர்வில் அத்தகைய நடவடிக்கைக்குப் பொறுப்பு நிர்ணயிக்கப்பட வேண்டும். நிர்வாக ஒப்புதல் வாங்குவதற்கு முன்னரே மேற்சொன்ன பிரச்சினைகள் பற்றி ஆய்வு செய்யப்பட்டிருக்க வேண்டும். செயல்படுத்தும் துறைகள் நிர்வாக ஒப்புதல் பெற விண்ணப்பிக்கின்றபோது சம்மந்தப்பட்ட தொடர்புடைய பிரச்சினைகளை அரசிடம் முன்வைக்க வேண்டும். இதுதொடர்பான விரிவான பதிலை பெறுவதற்கு குழு விரும்புகிறது.

## *துறையின் பதில்*
## *(6)*

விழுப்புரம் – திருவண்ணாமலை சாலையில் கி.மீ.7/0–9/2, 14/0, 15/8 & 24/0–25/8 வண்டிப்பாதையானது மிகவும் மோசமான நிலையில் இருந்ததால் வலுப்படுத்துவதற்கான தேவையான செயற்குறிப்புகள் மாநில அரசுக்கு ஒப்புதல் வேண்டி தலைமைப் பொறியாளர் அவர்களால் அனுப்பப்பட்டு அதன்படி அரசு ஒப்புதல் வழங்கியது.

வண்டிப்பாதையானது அதிக அளவில் சேதம் அடைந்ததாலும், கடுமையான போக்குவரத்து மற்றும் விபத்துக்களை தவிர்ப்பதற்காக மேற்சொன்ன சாலையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டது.

மாநில சாலைகள் தேசிய நெடுஞ்சாலையாக மாற்றம் செய்யப்படும்போது அச்சாலைகளில் எவ்வாறு பணிகள் மேற்கொள்ளவேண்டும் என்பதற்கு தேவையான அறிவுரைகள் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு வழங்கப்பட்டது.

குழுவின் பரிந்துரை குறித்துக் கொள்ளப்பட்டு இத்தவறு இனிவரும் காலங்களில் நிகழாவண்ணம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## *குழுவின் கருத்துரைகள்*
## *(7)*

தேசிய நெடுஞ்சாலைகளாக அறிவிக்கப்பட்ட பின்னர் சாலைகளைப் பழுது பார்ப்பதற்கான தேவையை சுட்டிக்காட்டுகிற ஆவணத் தயாரிப்பின் விவரங்களை துறை அளிக்கத் தவறியது குறித்து குழு வருந்துகிறது. மேலும், அளிக்கப்பட்ட செயற்குறிப்பில் மேற்சொன்னவற்றின் விவரங்களை அரசின் கவனத்திற்கு துறை கொண்டுசெல்லத் தவறியதையும் குழு குறிப்பிடுகிறது.

பிரிவுக்கு சம்பந்தப்பட்ட உத்தரவுகள் ஏதேனும் அளிக்கப்பட்டிருப்பின் அதன் விவரங்கள் குழுவின் கவனத்திற்கு கொண்டு வரலாம்.

| Serial No. | Recommendation No. | Paragraph No. | Subject | Committee's Observations/Recommendations |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 3 | 5 | 4.1 | General. | The Committee desires that expeditious action should be taken by the Government on all the recommendations in this report. Wherever specific time limits have been indicated in the recommendations, they should be adhered to. In other cases, a final report of action taken should be sent within six months. |

| Reply from the Department | Comments of the Committee |
|---|---|
| (6) | (7) |
| According to the Committee recommendations expeditious action will be taken on all the recommendations in this report and the indicated specific time limits will be followed and also it is informed that in other cases a final report of action taken will be sent within six months in future. | The status of submission of replies may be updated to the committee. |

### *குழுவின் குறிப்புரைகள்/பரிந்துரைகள்*
### *(5)*

இவ்வறிக்கையில் அளிக்கப்பட்டுள்ள அனைத்துப் பரிந்துரைகளின் மீதும் அரசு விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். காலக்கெடு குறிப்பிட்டுள்ள நேர்வுகளில் அதனைப் பின்பற்ற வேண்டும். காலக்கெடு குறிப்பிடாத நேர்வுகளில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து இறுதி அறிக்கை ஆறு மாதத்திற்குள் குழுவிற்கு அளிக்கப்பட வேண்டும்.

### *துறையின் பதில்*
### *(6)*

குழு பரிந்துரைப்படி அனைத்துப் பரிந்துரைகள் மீதும் விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் காலக்கெடு குறிப்பிட்டுள்ள நேர்வுகளில் காலக்கெடு பின்பற்றப்படும் என்றும், மேலும் காலக்கெடு குறிப்பிடாத நேர்வுகளில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து இறுதி அறிக்கை ஆறு மாதத்திற்குள் குழுவிற்கு இனி வரும் காலங்களில் அளிக்கப்படும் என்றும் தெரிவித்துக கொள்ளப்படுகிறது எனவும் குழுவிற்கு தெரிவிக்கப்படுகிறது.

### *குழுவின் கருத்துரைகள்*
### *(7)*

அளிக்கப்பட்ட பதில்களின் நிலை குறித்து நாளது வரையிலான விவரங்களை அளிக்குமாறு குழு கோருகிறது.